5. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(இ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது கொடுக்கப் பெற்றுள்ள உரிமை மீறல் பிரச்சினை குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, நேற்றையதினம் நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தவறான தகவலைத் தந்தார் என்பதற்காக அவர் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறேன். உரிமைப் பிரச்சினைக்கு தாங்கள் முதலிடம் கொடுத்திருக்க வேண்டும். அதை இப்போது உடனடியாக எடுத்துக் கொள்ளலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மீது கொடுக்கப்பட்டுள்ள உரிமை மீறல் பிரச் நாளைக் காலை எடுத்துக் கொள்ளப்படும். உரிமை மீறல் பிரச்னையை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். முதலில் இதைக் கொடுத்த உறுப்பினர் அந்த நேரத்தில் தனது ஆசனத்தில் இருக்க வேண்டும். நான் பார்த்தேன், அப்போது அவர் ஆசனத்தில் இல்லை. எதுவானாலும் இது நாளைக் காலை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. கந்தசாமி: திரு. பரமசிவம் அவர்கள் எழுப்பிய கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றி ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இதைக் கேட்க முடியாது, அவர்தான் கேட்க வேண்டும். . . .

(ஈ) சுந்தரம்—கிளேடன் தொழிற்சாலை குறித்து

திரு. மு. கருணாநிதி: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், உரிமைப் பிரச்சினையை நாளைக் காலை எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நன்றி. அதற்கிடையே பாடி தொழிற்சாலையில் அமைதி ஏற்பட்டுவிட்டதாகவும், பிரச்னைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் தொழிற்சாலை திறக்கப்படப் போவதாகவும் அவையிலும் சொல்லப்பட்டது, பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது. ஆனால் நேற்று மாலையிலும் இன்று காலையிலும் வந்திருக்கின்ற செய்திகளைப் பார்த்தால், மீண்டும் அங்கு ஏதோ குழப்பமான சூழ்நிலை இருப்பதாகத் தான் தெரிகிறது. இதைப்பற்றி அரசுக்கு ஏதாவது செய்தி வந்திருக்கிறதா, அதன்பேரில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

(முற்பகல் 10—30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி ஒரு குறுகிய காலக் கேள்வி கொடுத்தால், நான் தகவல்கள் கொடுக்கத் தயாராக இருக்